**DEPOSITION OF WITNESSES**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**
**C.C. No: 109/19**
**Deposition of Witnesses for PW1**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.புனிதவதி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **12.09.2025.**

எதிரி ஆஜரில் இல்லை.மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்

## முதல் விசாரணை

நான் தற்போது திருச்சி திருவரும்பூர் மதுவிலக்கு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 05.01.2015ம் தேதி திருவரம்பூர் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில இருந்தபோது கஞ்சா விற்பதாக உதவி ஆய்வாளர் சத்தியதேவிக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி எடைகற்கள், தராசு ஆகியவற்றுடன், நானும் மற்றும் ராஜ்குமார் ஆகியோருடன் நவல்பட்டு ரோடு, சுருளிகோவில் தெரு சென்று கண்காணித்தபோது 61 வயது மதிக்கத்தக்க ரோஸ் கலர் கேரி பேக்குடன் நின்றுக்கொண்டிருந்தவர் தணிக்கை செய்தபோது, தன் பெயர் சின்னம்மாள், க/பெ.மாரிமுத்து என்றும் கையில் வைத்திருப்பது கஞ்சா என்றும் கூறியவரை, பிடித்து ரோஸ் கவரில் இருந்த கஞ்சா பொருளை எடை போட்டு பார்த்ததில் 1.100 கிகி கஞ்சா மற்றும் 500 ரூபாய் பணம் இருந்ததை பொது மக்கள் யாரும் இல்லாததால் காவலர்கள் மூலம் மகஜரில் 8.15 மணிக்கு கைப்பற்றி, சாம்பில் 50 கிராம் எடுத்து 05.01.2015 ம் தேதி தடய ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது. அதற்கான கைபற்றுதல் மகஜரில் நானும் ராஜ்குமாரும் கையொப்பம் செய்தோம். சார்பு ஆய்வாளர் எதிரியை 8.45 மணிக்கு கைதுசெய்தார். எதிரி மற்றும் கஞ்சாவுடன் 9 மணிக்கு நிலையம் வந்து கு.எண்.15/2015 சட்டப்பிரிவுகள் 8© r/w 20(b)(ii)(b) NDPS Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-

என்னை ஆய்வாளர் விசாரித்தது எப்போது என்றால் சம்பவத்து அன்றே என்னை விசாரித்தார் . ஆய்வாளர் என்னை விசாரித்த போது நாங்கள் எந்த வாகனத்தில் ரைடுக்கு சென்றோம் என்ற விபரத்தினை சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் அழைத்த பொதுமக்களின் பெயர் மற்றும் விபரம் குறித்துக்கொள்ளவில்லை. ரோஸ் கலர் பையை சார்பு ஆய்வாளர் கைபற்றினார். கைபற்றுதல்

மகஜரில் கையொப்பம் எதிரியிடம் வாங்கினோமா என்றால் அது பற்றி தற்போது எனக்கு தெரியவில்லை. மகஜரில் **சாம்பிள் 50 கிராம் எடுத்**த விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மகஜரில் யார் எழுதினார்கள் என்றால் தற்போது தெரியவில்லை. **நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் தகவல் வரவில்லை என்றும், சாட்சியங்களுடன் ரைடுக்கு சென்றதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் எதிரியிடம் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும்,** மகஜர் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டு உயர் அதிகாரிகள் கேட்டுகொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிஅல்ல. **ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. உயர்அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by her/ her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.